அவ்வளவு மோசமாக நிதி நிலைமை இருக்கிறதா? ஏன் இந்த ஏழுகோடி ரூபாய் கலெக்ட் பண்ணவேண்டிய நிலைமை ஏற்பட்டது? அதற்கான விளக்கங்களை அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன். அதோடு ஏற்கெனவே பணம் கொடுத்திருக்கக் கூடியவர்களுக்குச் சலுகை கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒட்டு மொத்தமாக கேள்விகளைக் கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்? ஒவ்வொன்றாக கேட்டால் விவரம் சொல்கிறேன். ஏற்கெனவே மூன்று மாதம் செக்யூரிடி டெப்பாசிட் கொடுத்திருக்கிறார்கள். இப்போது அடிஷனல் செக்யூரிடியாக ஒரு மாதப் பணம் தான் கேட்கிறோம். இதனால் எவ்வளவு தொகை கிடைக்கும் என்பதைக் கணக்கிட்டுச் சொன்னேன். அதன் பின்னர் விவசாயக் காரியங்கள், தொழில்கள், வீட்டு உபயோகம் போன்றவைகளுக்குத் தனித் தனியாகக் கணக்கிட்டுப்பார்த்ததில் சுமார் எட்டு கோடி ரூபாய் வந்தது. இப்போது திருத்திய கணக்குப்படி ஏழு கோடி ரூபாய் வருகிறது. விவசாயிகளுக்கு இதிலிருந்து விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அடிஷனல் செக்யூரிட்டி கட்ட அவர்களுக்குச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

டாக்டர் எச். வி. ஹாண்டே: சார், பாண்யிட் ஆப் ஆர்டர், I am on a point of order immediately arising.

5. அறிவிப்பு.

தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு, மின்சாரத் தீர்வை(திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (டாக்டர் எச். வி. ஹாண்டே, பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்டு, நின்றுகொண்டிருந்தார்) உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டரைப் பிறகு கேளுங்கள்.

தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மின்சாரத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.